# கைத்தொழில்

## பொதுவான செயலாற்றம்

1994 இல் கைத்தொழில் துறை மிதமான வள்ர்ச்சி விசையுடன் தொடர்ந்து விரிவடைந்தது. 1993 இல் உண்மை நியதிகளில் 14 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 1994 இல் மேலும் 9 சதவீதத்தினால் விரிவடைந்தது. இவ்வளர்ச்சியானது 11 சத வீதத்தினால் வளர்ச்சியடைந்த தனியார் துறைக்கைத்தொழிலிருந்தே முழுமையாகப் பெறப்பட்டது. மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் ஒன்பதில் ஒரு பங்கிற்கு மட்டுமே வகைகூறிய அரசதுறை 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

தனியர் துறையில் உற்பத்தியில் பாரிய அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத் துறைகளாக உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள்; இரசாயனம், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள்; மரமும் மர உற்பத்திப் பொருட்களும்; தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள்; உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள்; உணவு குடிபானம் மற்றும் புகையிலை என்பன விளங்கின. அரசதுறைக் கைத்தொழில் துறையின் வெளியீடு குறைவடைந்தமைக்கு அரச துறையிலிருந்து தனியார் துறைக்கு பல கைத்தொழில் முயற்சிகளின் உடைமை மாற்றல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்களின் வெளியீட்டில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியே பெருமளவுக்குக் காரணமாக அமைந்தது.

ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் ஒன்று சேர்ந்த வெளியீடு 1994 இல் சிஎஉ நியதிகளில் 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1993 இன் ரூ. 1,004,200 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 1,167,440 இலட்சத்திற்கு அதிகரித்தது.

## உற்பத்தி

1994 இல் உண்மை நியதிகளில் கைத்தொழில் வெளியீட்டின் பெறுமதி 9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1994 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவ் செய்த கைத்தொழில் துணைத்துறைகளாக அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் (33 சதவீதம்); மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் (16 சதவீதம்); தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் (14 சதவீதம்); உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (14 சதவீதம்); உலோகமல்லாக் கனிப் பொருள் உற்பத்திப் பொருட்கள் (13 சதவீதம்); வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் (13 சதவீதம்); இரசாயனம், பெற்றோலியம்;, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (11 சதவீதம்); உணவு, குடிபானம், புகையிலை (8 சதவீதம்); புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் (6 சதவீதம்) என்பன விளங்கின.

**தனியார் துறைக் கைத்தொழில்கள்**

1993 இல் உண்மை நியதிகளில் 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்த தனியார் துறைக் கைத்தொழில்களின் உற்பத்திப் பெறுமதி 1994 இல் மேலும் 11 சதவீதத்தினால் விரிவடைந்தது. இவ்வளர்ச்சியானது பெரும்பாலும் உணவு மற்றும் குடிபானம், புகையிலை; புடவை, அணியும் ஆடைகள், மற்றும் தோல் உற்பத்திப் பொருட்கள், இரசாயனங்கள் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள்; உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் ஆகிய நான்கு உற்பத்தி வகைகளிலிருந்தே உருவானது.

புடவை, அணியும் ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள் துணைத் துறையின் வெளியீடு முழுமையாக தனியார் துறைக் கைத்தொழில்களிலிருந்தே உருவாகியது. முன்னைய ஆண்டின் 17 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் இந்த வகையினது வெளியீடு 6 சதவீதத்தினால் விரிவடைந்தது. அனுமதிப் பங்கு ஒதுக்கீட்டின் கிடைக்கத்தக்க தன்மையினைச் சரியான முறையில் கருத்திற்கொள்ளாது அணியும் ஆடைகள் துறையில் உருவாக்கப்பட்ட மிகை இயலளவானது இக்கைத்தொழிலின் திறமையிலும் இலாபத் தன்மையிலும் பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. ஏற்றுமதிசார்ந்த கைத்தொழில்களுக்குக் கிடைத்த தாழ்ந்த விலைகள் அணியும் ஆடைகள் துறையில் வளர்ச்சிவிசை குறைவடைவதற்கு பெருமளவு பொறுப்பாக இருந்தன. சில பாரிய புடவை மற்றும் அணியும் ஆடை தொழில் முயற்சிகளில் காணப்பட்ட தொழில் பிணக்குகளும் இத்துறையின் செயலாற்றத்தில் எதிர்த்தாக்கத்தினைக் கொண்டிருந்தன. தோல் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் மேம்பட்ட செயலாற்றத்தின் பெருமளவு காரணத்தினால் இவ்வாண்டில் தோல் உற்பத்திப் பொருட்கள் வெளியீட்டில் கணிசமான அதிகரிப்பைப் பதிவு செய்தன.

தனியார் துறைக் கைத்தொழில் வெளியீட்டில் 26 சதவீதத்தினைக் கொண்டிருந்த உணவு, குடிபானம், புகையிலை வகையின் வெளியீடு 1994 இல் 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இந்த வகையினது தனியார் துறைக் கைத்தொழில்களின் அதிகரித்த வெளியீடு பண்ணை உற்பத்திப் பொருட்கள், விசுக்கோத்து, இனிப்பு வகைகள், மா, பழவர்க்கங்கள் மற்றும் மரக்கறிகளின் பதனிடல், இறைச்சி உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் மேம்பட்ட உற்பத்தியில் பெருமளவு பிரதிபலிக்கப்பட்டது. மாறாக உணவு, குடிபானம், புகையிலை வகையின் வெளியீட்டின் மிகப்பெரிய பங்களிப்பாளர்களாகிய புகையிலை உற்பத்திப் பொருட்களின் வெளியீடு 1994 இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில் பிணக்குகளின் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தியும் உள்நாட்டுக் கேள்வியின் வீழ்ச்சியுமே இதற்கான காரணமாக அமைந்தது. முக்கிய தயாரிப்புத் தொழில் முயற்சிகளில் தொழிலாளர் அமைதியின்மையின் முதன்மைக் காரணத்தினால் கோழித்தீன் உற்பத்தி சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

1994 இல் இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் மொத்த வெளியீட்டில் கிட்டத்தட்ட அரைப்பங்கிற்கு தனியார் துறைக் கைத்தொழில் வெளியீடு வகைகூறியது. விவசாய இரசாயனங்கள், மருந்தாக்கற் பொருட்கள், இறப்பர் மற்றும் பிளாத்திக்குப்

பொருட்கள், சவர்க்காரம், குளியலறைப் பாவனைப் பொருட்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார் துறைக் கைத்தொழில்கள் அதிகரித்த உற்பத்தி மட்டங்களைப் பதிவு செய்தன. கைத்தொழில் மற்றும் அறுவைச் சிகிச்சை கையுறைகளின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களும் 1994 இல் மேம்பட்ட செயலாற்றத்தைப் பதிவு செய்தன.

உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தித் துணைத்துறையின் மொத்த வெளியீட்டில் ஐந்தில் நான்கு பங்கிற்குப் பங்களிப்புச் செய்த தனியார் துறைக் கைத்தொழில்கள் 1994 இல் தொடர்ந்து விரிவடைந்தன. இவ்வாண்டில் அதிகரித்த கட்டுமான நடவடிக்கைகளின் மேம்பட்ட மட்டத்திலிருந்து உருவான அதிகரித்த கேள்வியினைத் திருப்திப்படுத்தும் வகையில் சீமெந்து, கண்ணாடி மற்றும் கண்ணாடி உற்பத்திப் பொருட்கள், கல்நார்த் தகடு என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார் துறைக்கைத்தொழில்களில் அதிகரித்த உற்பத்தி மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. மாறாக , முன்னைய ஆண்டில் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பதிவுசெய்த மட்பாண்ட உற்பத்திப் பொருட்கள் தொழிலாளர் அமைதியின்மையின் காரணமாக 1994 இல் வீழ்ச்சியடைந்தன. சுண்ணப்பாறை உற்பத்திப் பொருட்கள், பீங்கான் வகைகள், கருங்கல் பாளங்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள ஏற்றுமதி சார்ந்த முதலீட்டுச் சபைக் கைத்தொழில்கள் வெளியீட்டில் மேம்பட்ட செயலாற்றத்தைக் காட்டின. ஏற்றுமதியின் மெதுவான வளர்ச்சியின் காரணமாக வைரக் கற்களின் வெட்டலும் பட்டை தீட்டலும் சிறிதளவு மேம்பாட்டினையே பதிவு செய்தன.

1994 இல் தனியார் துறையில் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் துணைத்துறை வெளியீட்டில் 16 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பானது அச்சிடல், தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள், சுட்டுத் துண்டுகள், பொதியிடற் பொருட்கள் என்பனவற்றில் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களிலிருந்தே பெருமளவில் உருவானது.

முன்னைய ஆண்டில் நலிந்த செயலாற்றத்தைக் காட்டிய உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் துணைத்துறையின் வெளியீடு 1994 இல் கணிசமான மேம்பாட்டைக் காட்டியது. 1994 இல் உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்களின் வெளியீட்டின் உயர் வளர்ச்சியானது உருவமைக்கப்பட்ட உலோகம், மின் உபகரணங்கள், பற்றரிகள், கம்பிகள், மின் குமிழ்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களின் மேம்பட்ட செயலாற்றத்திலிருந்தே பெருமளவு உருவானது. பேருந்துகள் மற்றும் சரக்கு வண்டிகள் என்பனவற்றின் உடற்பொருத்து வேலைகளில் ஈடுபட்டுள்ள தனியார்துறைக் கைத்தொழில்களிலும் அதிகரித்த வெளியீட்டு மட்டங்கள் பதிவு செய்யப்பட்டன.

வேறு எங்கும் குறித்துரைக்கப்படாத தயாரிப்பு உற்பத்திப் பொருட்களின் வெளியீடு முன்னைய ஆண்டின் மிதமான விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் கணிசமான மேம்பாட்டினை பதிவு செய்தது. இந்த அதிகரிப்பானது தென்னந்தும்பு உற்பத்திப் பொருட்கள், மெத்தைகள், மீன்பிடிக் கருவிகளும் நைலோன் வலைகளும், தூரிகைகள் மற்றும் ஆபரணங்கள் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைத்தொழில்களிலிருந்தே பெருமளவு உருவாகியது.

## அரசதுறைக் கைத்தொழில்கள்

உண்மை நியதிகளில் 1994 இல் அரசதுறைக் கைத்தொழில்கள் முன்னைய ஆண்டின் 20 சதவீத அதிகரிப்புக்கு மாறாக 5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. 1993 திசெம்பரில் சீமெந்து மற்றும் மட்பாண்டங்களின் உற்பத்தி அலகுகளின் உடைமை அரசதுறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் வகையினது வெளியீட்டில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியே இதற்கான முதன்மைக் காரணமாக விளங்கியது. அரசதுறைக் கைத்தொழிலின் மொத்த வெளியீட்டில் கிட்டத்தட்ட 78 சதவீதத்துக்கு வகைகூறிய இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1994 இல் 4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. பெற்றோலியம் நீக்கப்படுமிடத்து அரசதுறைக் கைத்தொழில்கள் 33 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளியீட்டில் வீழ்ச்சியினைப் பதிவுசெய்த தொழில் முயற்சிகளாக அரச மரக் கூட்டுத்தாபனம் (13 ·சதவீதம்) வரையறுக்கப்பட்ட லங்கா பொசுப்பேற்று (11 சதவீதம்) என்பன விளங்கின.

**அட்டவணை 1.18**

**அரசதுறை முதன்மைக் கைத்தொழில்களின் வெளியீட்டுச் சுட்டெண் 1992 – 1994**
**(1977 = 100)**

| வகை | | 1992 | 1993 | 1994 (அ) |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | ... | 13.4 | 8.1 | 9.3 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | ... | 27.5 | 10.3 | - |
| 3. மரமும், மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) | ... | 20.3 | 25.4 | 22.0 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | ... | 156.6 | 174.1 | 187.8 |
| 5. இரசாயன, பெற்றோலிய, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | ... | 86.9 | 121.8 | 126.3 |
| 5.1 பெற்றோலிய உற்பத்திகள் | ... | 91.8 | 129.4 | 134.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியம் நீங்கலாக) | ... | 143.4 | 120.0 | 5.5 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | ... | 125.7 | 92.4 | 130.8 |
| எல்லா வகைகளும் | ... | 73.3 | 87.9 | 83.8 |
| பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த | ... | 52.7 | 41.7 | 27.7 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அரசின் மக்கள் மயப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட வயம்ப அக்ரோ பர்டிலயிசர் கம்பனி, வரையறுக்கப்பட்ட ருகுணு அக்ரோ – பர்டிலயிசர் கம்பனி, வரையறுக்கப்பட்ட லங்கா லுப்பிரிகன்ட் என்பனவற்றின் உடைமை அரசதுறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றல் செய்யப்பட்டது.

மரம் தறிக்கும் தொழிற்பாட்டின் தாழ்ந்த மட்டத்தின் காரணமாக மரத்தின் வழங்கல் போதுமானதாகக் காணப்படாமையினால் அரச மரக் கூட்டுத்தாபனத்தின் வெளியீடு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுச் சந்தையில் விற்பனைகள் வீழ்ச்சியடைந்தமை வரையறுக்கப்பட்ட லங்கா பொசுப்பேற்று நிறுவனத்தின் குறைந்த வெளியீட்டு மட்டத்திற்கு வழி வகுத்தது.

இவ்வாண்டில் உற்பத்தி அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளாக இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம் (42 சதவீதம்), வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் நிறுவனம் (15 சதவீதம்), வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனம் (15 சதவீதம்), வரையறுக்கப்பட்ட தேசிய தாள் கம்பனி (15 சதவீதம்), வரையறுக்கப்பட்ட சிறிலங்கா இறப்பர் தயாரிப்புக் கம்பனி (5 சதவீதம்), மற்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (4 சதவீதம்) என்பன விளங்கின.

மூலப்பொருட்கள் போதுமான அளவு வழங்கப்பட்டமையின் விளைவாக இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் வெளியீட்டில் அதிகரிப்புக் காணப்பட்டது. வரையறுக்கப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில் நிலையத்தின் உற்பத்தி அதிகரிப்பு இவ்வாண்டில் செவனகல சீனித் தொழிற்சாலைக்கு அதிகரித்த அளவில் கரும்பு கிடைக்கப்பெற்றமையின் விளைவாகும். அறுவடைக் காலத்தில் நிலவிய வரட்சியான வானிலைத் தன்மையானது 1994 இல் வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட் நிறுவனத்தின் வெளியீட்டில் அதிகரிப்பை ஏற்படுத்தியது. தாள் உற்பத்திப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியைத் தொடர்ந்து வாழைச்சேனை ஆலையின் இயலளவுப் பயன்பாட்டில் ஏற்பட்ட உயர்ந்த மட்டமானது 1994 இல் வரையறுக்கப்பட்ட தேசிய தாள் கம்பனியின் வெளியீடு அதிகரிப்பதற்கு முக்கிய காரணியாக அமைந்தது.

அரசதுறைத் தொழில் முயற்சிகளின் துறைவாரியான பகுப்பாய்வின் நியதிகளின்படி, அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் துறை அதிஉயர் வளர்ச்சி வீதத்தினை (42 சதவீதம்) பதிவு செய்தது. அதிகரித்த உற்பத்தி மட்டங்களைப் பதிவுசெய்த ஏனைய துறைகளாக உணவு குடிபானம் புகையிலை (15 சதவீதம்); தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் (8 சதவீதம்) மற்றும் இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் (4 சதவீதம்) என்பன விளங்கின. வெளியீட்டில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த துறைகளாக உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (95 சதவீதம்) மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் (13 சதவீதம்) என்பன விளங்கின.

## நடைமுறை நியதிகளில் உற்பத்திப் பெறுமதி

1994 இல் நடைமுறை நியதிகளில் பொதுவான கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 15 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 30 சதவீதத்தினாலும் அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் 28 சதவீதத்தினாலும் வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள் 20 சதவீதத்தினாலும் உருவமைக்கப்பட்ட

உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் 20 சதவீதத்தினாலும் தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் 18 சதவீதத்தினாலும் உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் 18 சதவீதத்தினாலும் இரசாயனங்கள், பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் 18 சதவீதத்தினாலும் புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் 12 சதவீதத்தினாலும், உணவு குடிபானம், புகையிலை 14 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

**அட்டவணை 1.19**

**கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1990 – 1994**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1990 | 1991 | 1992 | 1993 (ஆ) | 1994 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 21,955 | 30,003 | 34,157 | 39,709 | 45,054 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 27,930 | 33,854 | 53,929 | 70,057 | 78,211 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) | 721 | 802 | 1,005 | 1,230 | 1,601 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 1,880 | 2,214 | 2,586 | 3,438 | 4,066 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 21,215 | 20,140 | 23,817 | 28,876 | 34,017 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்த்து) | 7,554 | 8,181 | 10,582 | 12,351 | 14,580 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 1,006 | 1,264 | 1,424 | 1,497 | 1,909 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 4,199 | 5,093 | 5,948 | 5,915 | 7,122 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 296 | 2,373 | 2,658 | 3,402 | 4,083 |
| மொத்தம் | 86,756 | 103,924 | 136,106 | 166,475 | 190,643 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை.
(ஆ) திருத்தப்பட்டது.

## கூட்டிய பெறுமதி

நடைமுறை நியதிகளில் கைத்தொழிலில் கூட்டிய பெறுமதி முன்னைய ஆண்டின் 21 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1994 இல் 15 சதவீதத்தினால் அதிகரித்தது. கூட்டிய பெறுமதியானது வெளியீட்டின் தொழிற்சாலை நிலைப் பெறுமதியிலிருந்து மூலப் பொருட்கள் வலு, எரிபொருள் என்பனவற்றின் செலவைக் கழிப்பதன் மூலம் பெறப்படுகின்றது.

1994 இல் தயாரிப்புக் கைத்தொழிலின் கூட்டிய பெறுமதி ரூ. 699,830 இலட்சமாகும். வெளியீட்டின் பெறுமதியின் விகிதமொன்றாக சராசரி கூட்டிய பெறுமதி முன்னைய ஆண்டின் 36 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 37 சதவீதமாக விளங்கியது. 50 சதவீதத்துக்கு மேலான கூட்டிய பெறுமதி விகிதத்தினைக் கொண்ட கைத்தொழில் வகைகளில் மரம் மற்றும் மர உற்பத்திப் பொருட்கள் (68 சதவீதம்), உலோமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் (64 சதவீதம்), உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள் (61 சதவீதம்), தாள் மற்றும் தாள் உற்பத்திப் பொருட்கள் (57 சதவீதம்), உணவு குடிபானம், புகையிலை (54 சதவீதம்) என்பன விளங்கின. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்புப் பொருட்கள் (45 சதவீதம்) புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் (26 சதவீதம்), அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் (19 சதவீதம்), பெற்றோலியம் மற்றும் இரசாயன உற்பத்திப் பொருட்கள் (17 சதவீதம்) ஆகிய வகைகளின் தயாரிப்புப் பொருட்களின் கூட்டிய பெறுமதி விகிதங்கள் 50 சதவீதத்திற்குக் கீழானவையாகும்.

**அட்டவணை 1.20**

**கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி 1990 – 1994**
**(நடைமுறை விலைகள்)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகை | 1990 | 1991 | 1992 | 1993 (ஆ) | 1994 (அ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 12,065 | 15,070 | 18,668 | 21,704 | 24,373 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 7,167 | 8,542 | 14,630 | 18,994 | 20,660 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் (தளபாடங்கள் உட்பட) | 485 | 571 | 677 | 831 | 1,081 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 1,019 | 1,167 | 1,397 | 1,912 | 2,301 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 2,428 | 3,199 | 3,989 | 4,723 | 5,758 |
| 6. உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்திகள் (பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த) | 4,742 | 4,905 | 5,918 | 7,163 | 9,272 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 194 | 248 | 263 | 279 | 356 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 2,746 | 3,247 | 3,629 | 3,608 | 4,344 |
| 9. தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் (வே. எ.கு.) | 138 | 1,092 | 1,196 | 1,532 | 1,838 |
| மொத்தம் | 30,984 | 38,041 | 50,367 | 60,746 | 69,983 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) தற்காலிகமானவை
(ஆ) திருத்தப்பட்டது

## வலுவும் எரிபொருளும்

இலங்கை மின்சபைக்கான விற்பனைகள் நீங்கலாக 1994 இல் கைத்தொழில் எரிபொருளின் விற்பனைகள் 10 சதவீதத்தினால் அதிகரித்தன. உலை எண்ணெய்

மற்றும் பாரடீசல் என்பனவற்றின் விற்பனைகள் முறையே 9 சதவீதத்தினாலும் 22 சதவீதத்தினாலும் அதிகரித்தன.

1994 இல் கைத்தொழிலில் மின்பாவனை 8 சதவீதத்தினால் அதிகரித்தது. இது சிறிய கைத்தொழில்களுக்கான 16 சதவீத அதிகரிப்பினதும் நடுத்தர அளவு கைத்தொழில்களுக்கான 1 சதவீத அதிகரிப்பினதும் பாரிய கைத்தொழில்களுக்கான 14 சதவீத அதிகரிப்பினதும் இணைவாகும்.

**அட்டவணை 1.21**

**கைத்தொழிலில் பயன்படுத்தப்பட்ட வலுவும், எரிபொருளும் 1993 – 1994**

| விடயம் | 1993 (ஆ) | 1994 (அ) |
|---|---|---|
| 1. மின்வலு (கிகாவாட் மணித்தியாலங்கள்) (இ) ... ... | 1,218.1 | 1,314.0 |
| 1.1 சிறு கைத்தொழில் ... ... | 84.4 | 98.0 |
| 1.2 நடுத்தரக் கைத்தொழில் ... ... | 622.9 | 632.0 |
| 1.3 பாரிய கைத்தொழில் ... ... | 510.8 | 584.0 |
| 2. கைத்தொழில் எரிபொருளின் உள்நாட்டு விற்பனைகள் ('000 மெற்றிக் தொன்கள்) (ஈ) ... ... | 193.9 | 214.0 |
| 2.1 பார டீசல் ... ... | 18.0 | 21.9 |
| 2.2 உலை எண்ணெய் ... ... | 175.9 | 192.1 |

மூலம் : இலங்கை மின் சபை.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

(அ) மதிப்பீடு

(ஆ) திருத்தியமைக்கப்பட்டது.

(இ) சிறு கைத்தொழில் மின்வலுவின் வழங்கல் 400/230 வோல்ட்டுக்களும் ஒப்பந்தக் கேள்வி 50கிவாஅ இற்குக் குறைவானதுமான அலுகுகள் எனவும்; நடுத்தரக் கைத்தொழில் மின்வலுவின் வழங்கல் 400/230 வோல்ட்டுக்களும், ஒப்பந்தக் கேள்வி 50 கிவாஅ இற்குச் சமமானதும் அல்லது அதற்குக் கூடுதலானதும் எனவும்; பாரிய கைத்தொழில் மின் வழங்கலின் வழங்கல் 11 கிவா, 33 கிவா, 132 கிவா எனவும் வரையறுக்கப்பட்டுள்ளன.

(ஈ) இலங்கை மின்சபை தவிர்ந்தவற்றுக்கான விற்பனைகள்.

## கைத்தொழில் கொள்கை

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் அரசு கைத்தொழில்களுக்கு பிரதேச அடிப்படையில் மேம்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து வழங்கியது. 1994 ஏப்பிறலில் மத்திய மாகாணத்தில் பல்லேகல என்ற இடத்தில் நான்காவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் நிறுவப்பட்டது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கூட்டுடன் நாட்டின் பிரதேசங்களில் கைத்தொழில் பேட்டைகள்/பண்ணைகள் நிறுவும் நிகழ்ச்சித் திட்டமொன்றை அரசு தொடக்கிவைத்துள்ளது. கைத்தொழில் துறையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பனவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் 1994 மேயில் அமைச்சரவையினால் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்திச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் பல வரிச் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் 1994 ஏப்பிறலிலிருந்து செயற்படும் வகையில் கூட்டுவரி வீதம் 40 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. இதுவரை காலமும் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட வரிச் சலுகை விடுமுறைகள் 1994 ஏப்பிறல் மாதத்திலிருந்து செயற்படும் வகையில் 15 சதவீதம் கொண்ட விருப்புத் தேர்வு வரி வீதமொன்றினால் பதிலிடப்பட்டது.

அரசின் தனியார் மயப்படுத்தற் கொள்கைக்கு இசைந்து செல்லும் வகையில் ஆய்வுக்குரிய காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட வயம்ப அக்ரோ-பர்டிலயிசர் கம்பனி, வரையறுக்கப்பட்ட ருகுணு அக்ரோ-பர்டிலயிசர் கம்பனி வரையறுக்கப்பட்ட லங்கா லுப்பிரிகன்ட் என்பனவற்றின் பெரும்பான்மையான 90 சதவீத பங்குகள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விலைக்கோரல் சபையொன்றினால் முறையே ரூ. 205 இலட்சம் ரூ. 229 இலட்சம், ரூ. 2,391 இலட்சம் பெறுமதிக்கு விற்பனை செய்யப்பட்டன.

## கைத்தொழில்களுக்கான வசதிகள்

ஆய்வுக்குரிய காலப்பகுதியில் கைத்தொழில்துறை தொடர்ந்தும் சலுகை நியதிகளில் நிதி உதவிகளைப் பெற்றுக்கொண்டது. தேசிய அபிவிருத்தி வங்கியின் சிறிய நடுத்தரகால கைத்தொழில் செயற்றிட்டத் திட்டம் முக்கிய நிதியிடல் நிகழ்ச்சித் திட்டமாக விளங்கியது. அதன்கீழ் கைத்தொழில்கள் நிதி உதவியை பெற்றுக் கொண்டன. மேலதிகமாக இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும், தேசிய அபிவிருத்தி வங்கியும் மற்றும் ஏனைய வர்த்தக வங்கிகளும் கடன் மற்றும் மூலதனப் பங்கேற்பு அடிப்படையில் கைத்தொழில் முயற்சிகளுக்கு நேரடி நிதி வசதிகளை வழங்கின.

1994 திசெம்பர் இறுதியில், சிறிய அளவு கைத்தொழில்கள் மற்றும் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் i, ii, iii, iv என்பன தொடர்பாக ரூ. 50,630 இலட்சம் கடன் பகிர்ந்தளிப்புக்களுக்கான 14,368 உத்தரவாதங்களை மத்திய வங்கி வழங்கியிருந்தது. ஆண்டு இறுதியில் 4,578 கடன்கள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ரூ. 37,370 இலட்சம் கொண்ட தொகையில் ரூ. 14,500 இலட்சம் கொண்ட தொகை முழுமையாக மீட்கப்பட்டிருந்தது. வெளிநின்ற கடன்கள் தொடர்பாக 8,167 கடன்கள் சம்பந்தப்பட்ட ரூ. 2,330 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப்படாத நிலுவையாக இருந்தது. 1994 இறுதியில் 502 உரிமைக் கோரல்களின் தீர்ப்பனவுக்காக மத்திய வங்கி ரூ. 750 இலட்சம் கொண்ட தொகையினைச் செலுத்தியது.

கடன் மற்றும் மூலதனப் பங்கேற்பு மூலமாக தேசிய அபிவிருத்தி வங்கி கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு நேரடி வசதிகளை வழங்குகின்றது. 1993 இன் 262 செயற்றிட்டங்களுக்கான ரூ. 41,140 இலட்சம் கொண்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் தேசிய அபிவிருத்தி வங்கி 352 செயற்றிட்டங்களுக்காக ரூ. 5,417 இலட்சங்களைக் கொண்ட நேரடிக் கடன் வசதிகளுக்கு ஒப்புதலளித்தது. ஆய்வுக்குரிய காலப்பகுதியில் தேசிய அபிவிருத்தி வங்கி ரூ. 2,810 இலட்சம் கொண்ட மூலதனப் பங்கேற்பின் மூலம் 22 செயற்றிட்டங்களில் பங்குகொண்டது.

வசதிகளில் பாரிய பாகங்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில் வகைகளாக இரசாயனம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், உணவு, குடிபானம் புகையிலை, புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் மற்றும் அடிப்படை உலோக உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின.

கடன்கள் மற்றும் மூலதனப் பங்கேற்பு என்பனவற்றின் ஊடாக இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ரூ. 25,010 இலட்சம் கொண்ட 304 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. வசதிகளில் பாரிய பங்கினைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில் வகைகளாக உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திப் பொருட்கள், உணவு, குடிபானம், புகையிலை, இரசாயனம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள், புடவை அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின.

1994 இல் வர்த்தக வங்கிகளும் தொடர்ந்து நிதி வசதிகளை வழங்கின. ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் கைத்தொழில் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள் 1993 திசெம்பர் இறுதியின் ரூ. 184,500 இலட்சத்திலிருந்து 1994 செத்தெம்பர் இறுதியில் ரூ. 195,080 இலட்சத்திற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தன.

## வெளிநாட்டு தனியார் முதலீடு

இலங்கை முதலீட்டுச் சபை தொடர்ந்தும் ஒருமுகப்படுத்தப்பட்ட முதலீட்டு ஊக்குவிப்பு நிலையமாகத் தொழிற்பட்டது. பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 17 ஆவது பிரிவின் கீழ் (சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம்) 1994 இல் இலங்கை முதலீட்டுச் சபை 291 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1994 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1,482 இற்குக் கொண்டுவரப்பட்டது. இவற்றில், பலதரப்பட்ட கைத்தொழில்களை நிறுவுவதற்காக இலங்கை முதலீட்டுச் சபையுடன் 993 செயற்றிட்டங்கள் தொடர்பாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

1994 இறுதியில் மொத்தம் 442 தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் காணப்பட்டன. தொழிற்படும் இவற்றில் 92 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் 38 பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் 11 கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலும் 301 நாட்டின் ஏனைய பாகங்களிலும் காணப்பட்டன.

1994 இறுதியில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் தொழிற்படும் செயற்றிட்டங்களில் கைத்தொழில் துறை கணிசமான புதிய முதலீடுகளைப் பதிவு செய்தது. 1994 இறுதியில் முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழில் முயற்சிகளில் 449 தொழில் முயற்சிகள் ரூ. 469,590 இலட்சம் கொண்ட தொகையினை முதலீடு செய்திருந்தன. இம் முதலீட்டில் வெளிநாட்டு மூலகம் ரூ. 282,380 இலட்சம் அல்லது மொத்த முதலீட்டின் 60 சதவீதமாக விளங்கியது. புடவை, அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள்; இரசாயனம் பெற்றோலியம் இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள் மற்றும் தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், ஆகிய வகைகள் மொத்த முதலீட்டில் முறையே 17 சதவீதத்தினையும் 9 சதவீதத்தினையும் 5 சதவீதத்தினையும் ஈர்த்துக்கொண்டன.

அட்டவணை 1.22

## தேசிய அபிவிருத்தி வங்கியினாலும் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினாலும் இசைவளிக்கப்பட்ட கடன், நிதியியல் உதவி, பங்கு மூலதன ஒப்புதல்கள் – 1994

| வகைகள் | தே.அ.வ | | | | | | | | இ.சு.நி.கூ | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மீள் நிதியிடலுக்கான ஒப்புதல்கள் சி. ந. கை. செயல் திட்டம் IV | | நேரடி நிதியியல் உதவி | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | ஒப்புதலளிக் கப்பட்ட கடன் | | பங்கு மூலதனம் | | மொத்தம் | | முழு மொத்தம் | |
| | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) | எண் | தொகை (ப.இ.ரூ.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 134 | 69 | 35 | 564 | - | - | 169 | 633 | 75 | 463 | 1 | 1 | 76 | 464 | 245 | 1,097 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 71 | 53 | 42 | 402 | 3 | 94 | 116 | 549 | 56 | 311 | - | - | 56 | 311 | 172 | 860 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 54 | 43 | 12 | 61 | 1 | - | 67 | 104 | 26 | 81 | - | - | 26 | 81 | 93 | 185 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 41 | 41 | 1 | 64 | - | - | 42 | 105 | 28 | 221 | - | 2 | 28 | 223 | 70 | 328 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 38 | 70 | 76 | 728 | 7 | 48 | 121 | 846 | 59 | 477 | 3 | 7 | 62 | 484 | 183 | 1,330 |
| 6. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் | 24 | 10 | - | - | - | - | 24 | 10 | 19 | 255 | 2 | 66 | 21 | 321 | 45 | 331 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 53 | 50 | 9 | 156 | - | - | 62 | 206 | 5 | 16 | - | - | 5 | 16 | 67 | 222 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 148 | 90 | - | - | - | - | 148 | 90 | 36 | 264 | 1 | 337 | 37 | 601 | 185 | 691 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 331 | 274 | 177 | 3,442 | 11 | 139 | 519 | 3,855 | - | - | - | - | - | - | 519 | 3,885 |
| மொத்தம் | 894 | 700 | 352 | 5,417 | 22 | 281 | 1,268 | 6,398 | 304 | 2,088 | 7 | 413 | 311 | 2,501 | 1,579 | 8,899 |

மூலங்கள் : தேசிய அபிவிருத்தி வங்கி,
இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

## அட்டவணை 1.23

## முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளில் உண்மையான முதலீடுகள் (அ)

| வகை | தொழிற்பாட்டிலுள்ள தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை | உண்மையான வெளிநாட்டு முதலீடுகள் (ப. இ. ரூ.) | உண்மையான உள்நாட்டு முதலீடுகள் (ப. இ. ரூ.) | மொத்த முதலீடு (ஆ) (ப. இ. ரூ.) |
|---|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 29 | 397 | 480 | 877 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 97 | 6,593 | 1,615 | 8,208 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 11 | 331 | 24 | 356 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 7 | 171 | 54 | 225 |
| 5. இரசாயனம், இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 47 | 3,886 | 722 | 4,608 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 37 | 862 | 1,328 | 2,190 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறியும் போக்குவரத்துக் கருவியும் | 15 | 295 | 158 | 452 |
| 8. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 68 | 1,728 | 542 | 2,271 |
| 9. பணிகள் (தோட்ட வேளாண்மை உட்பட) | 138 | 13,975 | 13,798 | 27,772 |
| மொத்தம் | 449 | 28,238 | 18,721 | 46,959 |

மூலம் : இலங்கை முதலீட்டுச் சபை

(அ) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள்.
(ஆ) 31.12.94 இல் உள்ளவாறு

1994 இல் முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளில் (200 ஆடைத் தொழிற்சாலைகள் நீங்கலாக) தொழில் வாய்ப்புக்கள் 10 சதவீதத்தினால் அதிகரித்து இத்தொழில் முயற்சிகளில் தொழிலில் ஈடுபட்டிருந்த ஆட்களின் மொத்த எண்ணிக்கை 134,572 இற்குக் கொண்டுவரப்பட்டது. அவர்களில் 73,045 ஆட்கள் புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திப் பொருட்கள் துறையில் ஈடுபட்டிருந்தனர். இந்தத்துறையின் தொழில் வாய்ப்பின் சார்பு ரீதியான பங்கு 1993 இன் 57 சதவீதத்திலிருந்து 1994 இல் 54 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1994 இறுதியில் 200 ஆடைத் தொழிற்சாலைச் செயற்றிட்டத்தில் தொழிலில் ஈடுபட்டிருந்தோரின் எண்ணிக்கை 71,088 ஆட்களாகும். உயர் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிய ஏனைய வகைகளாக இரசாயனம் பெற்றோலியம், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள்; தயாரிக்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள்; உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திப் பொருட்கள் என்பன விளங்கின.

அட்டவணை 1.24

## முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் தொழில் நிலையும் ஏற்றுமதி வருவாய்களும் 1993 – 1994

| வகை | 1993 | | 1994 (அ) | |
|---|---|---|---|---|
| | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (இ) (க.ஏ.பெ.) (ப. இ. ரூ.) | தொழில் நிலை (திசெம்பர் முடிவில்) | மொத்த ஏற்றுமதி வருவாய்கள் (க.ஏ.பெ.) (ப. இ. ரூ.) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை | 3,094 | 2,838 | 4,105 | 3,032 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | (ஆ) 127,665 | 56,890 | 73,043 | 60,155 |
| 3. மரமும், மர உற்பத்திகளும் | 628 | 145 | 1,074 | 158 |
| 4. தாளும், தாள் உற்பத்திகளும் | 276 | 158 | 459 | 602 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 10,349 | 4,114 | 13,378 | 6,206 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 7,270 | 3,410 | 8,146 | 4,466 |
| 7. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகளும், போக்குவரத்துக் கருவிகளும் | 609 | 297 | 887 | 311 |
| 8. வேறெங்கும் குறிப்பிடப்படாத உற்பத்திகள் | 21,182 | 7,012 | 23,433 | 8,842 |
| 9. பணிகள் (இ) | 8,805 | 1,879 | 10,047 | 3,042 |
| மொத்தம் | 179,878 | 76,740 | 205,660 | 86,814 |

மூலம் : இலங்கை முதலீட்டுச் சபை

(அ) தற்காலிகமானவை.
(ஆ) மதிப்பிடப்பட்டது.
(இ) வரையறுக்கப்பட்ட "ஏயர் லங்கா" நீங்கலாக.

1994 இல் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்படும் மொத்த முதலீடு ரூ. 432,620 இலட்சமாகும். இதில் 57 சதவீதம் உள்நாட்டு மூலங்களிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. யப்பான், தென் கொரியா, தாய்வான், சேர்மனி, குவைத், பிரான்சு, மலேசியா, சிங்கப்பூர், அவுத்திரேலியா, ஐக்கிய இராச்சியம், இத்தாலி, ஐக்கிய அமெரிக்க நாடுகள், தாய்லாந்து, இந்தியா போன்ற பல நாடுகளிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வந்துள்ளனர். 1994 இல் முதலீட்டுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் இறப்பர் உற்பத்திப் பொருட்கள் மரத்தினாலான விளையாட்டுப் பொருட்கள், பீங்கான் வகைகள், வாயு சிலிண்டர்கள், மூலிகை உற்பத்திப் பொருட்கள், பழச்சாறு, பழங்களைப் பதனிடல், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரைப் போத்தலில் அடைத்தல், சிலிக்கா கல்வெட்டுதல் பதனிடல் என்பனவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

1994 இல் முதலீட்டுச் சபை உண்ணாட்டரசிறை மற்றும் வரி தொடர்பான சட்டங்களின் கீழ் (பொது ஊக்குவிப்புத் திட்டம்) 26 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடு ரூ. 74,030 இலட்சமாகும். அதில் வெளிநாட்டு மூலகம் ரூ. 43,950 இலட்சமும் உள்நாட்டு மூலகம் ரூ. 30,070 இலட்சமுமாகும். இத்தொழில் முயற்சிகளின் உள்ளார்ந்த தொழில் வாய்ப்பு 7,395 ஆட்களாகும்.

200 ஆடைத் தொழிற்சாலைகள் செயற்றிட்டத்தையும் உள்ளடக்கிய முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1993 இன் ரூ. 767,400 இலட்சத்துடன் (சிஎஉ 11,450 இலட்சம்) ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 868,150 இலட்சமாக (சிஎஉ 12,230 இலட்சம்) விளங்கியது. இது ரூ. 100,750 இலட்ச அல்லது 13 சதவீத அதிகரிப்பாகும். சிஎஉ நியதிகளில் இது 7 சதவீத அதிகரிப்பாகும். புடவை அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திப் பொருட்களிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் 86 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூபா நியதிகளில் 6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இந்த வகையானது தொடர்ந்தும் முக்கிய வெளிநாட்டுச் செலாவணி சம்பாதிப்பாளராக விளங்கி முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதி வருவாயில் 69 சதவீதத்திற்கு வகை கூறியது. ஆடை அல்லாத ஏற்றுமதித் துறையில் ஏற்றுமதி வருவாய்களில் கணிசமான அதிகரிப்பைக் காட்டிய உற்பத்திவகைகளாக இரசாயனம், பிளாத்திக்கு உற்பத்திப் பொருட்கள்; உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்தி வகைகள்; உணவு குடிபானம் என்பன விளங்கின.

இவ்வாண்டில் மலேசியா, சிங்கப்பூர், யப்பான், தென்கொரியா, தென்னாபிரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மின்னியல் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் வாய்ப்புக்களை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களைக் கவருவதற்காக இலங்கையில் இரு உள்நாட்டுக் கருத்தரங்குகள் நடாத்தப்பட்டன.

## அணியும் ஆடைகள் துறை

இலங்கையில் ஆடைக் கைத்தொழில் உயர் தரமான ஆடைகளைப் பரந்தளவில் தயாரிக்கின்ற ஏற்றுமதி சார்ந்த முக்கிய கைத்தொழிலாக மாறியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு மற்றும் முதலீட்டுச் சபையின்படி 1994 இறுதியில் 687 ஆடைத் தொழிற்சாலைகள் தொழிற்பாட்டிலிருந்தன. இவற்றில் 375 ஆடைத் தொழிற்சாலைகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுடன் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் 312 ஆடைத் தொழிற்சாலைகள் முதலீட்டுச் சபையின் மூலம் பணியாற்றப்பட்டன. பின்னையது இருநூறு ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட 165 தொழிற்சாலைகளையும் உள்ளடக்குகின்றது. முதலீட்டுச் சபையின் ஆடைத் தொழிற்சாலைகளில் 97 முதலீட்டுச் சபைச் சட்டத்தின் (சிறப்பு ஊக்குவிப்புத் திட்டம்) 17 ஆம் பிரிவின்கீழ் ஒப்புதலைப் பெற்றன. ஐம்பது தொழிற்சாலைகள் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் (பொதுவான ஊக்குவிப்புத் திட்டம்) தொழிற்படுகின்றன.

ஆடைத்துறையினால் பெரும்பாலும் கிராம இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட நேரடித் தொழில் வாய்ப்புக்கள் ஏறத்தாழ 225,000 ஆகும். 1990 இல் ரூ. 242,870 இலட்சமாக அல்லது இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 31 சதவீதத்திற்கு வகைகூறிய ஆடை ஏற்றுமதிகள் 1994 இல் ரூ. 689,450 இலட்சத்திற்கு அல்லது நாட்டின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 44 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. 1994 இல் தேயிலை, இறப்பர், தெங்கு மூன்றும் சேர்ந்து மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 22 சதவீதத்திற்கு மட்டுமே வகைகூறின.

### அட்டவணை 1.25

### ஐ. அ. நாடுகளின் அனுமதிப் பங்கு பயன்பாடு
### 1994 சனவரி - திசெம்பர்

| வகை எண் | உற்பத்தியின் விபரம் | அலகு | கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கு | பயன்பாடு | பயன்பாட்டு வீதங்கள் % |
|---|---|---|---|---|---|
| 237 | விளையாட்டு உடைகள் | டசின் | 267,674 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 331/631 | கையுறைகளும் ஒரக்கையுறைகளும் | ட.சோ | 3,330,773 | 3,121,553 | 93.72 |
| 333/633 | நீண்ட முழு உடைகள் | டசின் | 29,041 | 5 | 0.02 |
| 334/634 | ஏனைய தடித்த மேலங்கிகள் | டசின் | 867,071 | 776,946 | 89.61 |
| 335/835 | தடித்த மேலங்கிகள் | டசின் | 334,700 | 290,829 | 86.89 |
| 336/636/836 | ஆடைகள் | டசின் | 658,706 | 606,465 | 92.07 |
| 338/339 | ஆண் பெண். மேலங்கிகள் | டசின் | 1,344,752 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 340/640 | ஆண்களின் மேலங்கிகள் | டசின் | 1,343,974 | 1,225,673 | 91.20 |
| 341/641 | பெண்களின் மேலங்கிகள் | டசின் | 1,868,738 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 345/845 | குளிராடைகள் | டசின் | 113,332 | 77,671 | 68.53 |
| 347/348/847 | நீண்ட காற்சட்டைகள், தளர் ஆடைகள், கட்டைக் காற்சட்டைகள் | டசின் | 1,573,138 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 350/650 | பெண்களின் நீண்ட சட்டைகள் | டசின் | 59,280 | 56.875 | 95.94 |
| 351/651 | இரவு உடைகளும் பிஜாமாக்களும் | டசின் | 338,285 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 352/652 | உள்ளங்கிகள் | டசின் | 1,329,966 | 1,327,399 | 99.81 |
| 359C/659C | மேலுறைகள் | கி.கி. | 960,102 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 360 | தலையணை உறைகள் | எண் | 1,200,000 | 1,101,368 | 91.78 |
| 363 | மென்மயிர் மற்றும் துணிச்சடைத் துவாய்கள் | எண் | 7,881,596 | 3,673,688 | 46.61 |
| 368-D | சாப்பாட்டு மேசைத் துவாய்கள் | கி.கி. | 728,248 | 189,847 | 26.14 |
| 369-S | கடைத் துவாய்கள் | கி.கி. | 689,784 | 492,347 | 71.38 |
| 435 | தடித்த மேலங்கிகள் | டசின் | 15,750 | 15,226 | 96.67 |
| 635 | தடித்த மேலங்கிகள் | டசின் | 461,873 | 406,992 | 88.12 |
| 638/639/838 | பெண் ஆண் மேலங்கிகள் | டசின் | 758,023 | 568,291 | 74.97 |
| 644 | நீண்ட முழு ஆடைகள் | எண் | 258,635 | 76,152 | 29.44 |
| 645/646 | குளிராடைகள் | டசின் | 45,526 | 7,219 | 15.86 |
| 647/648 | நீண்ட காற்சட்டைகள், தளர் ஆடைகள், கட்டைக் காற்சட்டைகள் | டசின் | 777,128 | 726,443 | 93.48 |
| 840 | ஆண் பெண் மேற்சட்டைகள் (பட்டுடன் கலந்து நெய்யப்படாதவை) | டசின் | 250,000 | 248,949 | 99.58 |

மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

பல தசாப்தங்களாக மரபுவழி வேளாண்மை ஏற்றுமதிகளில் பெருமளவிற்குத் தங்கியிருந்த இலங்கையின் ஏற்றுமதி அமைப்பு ஆடைக் கைத்தொழில் விரிவாக்கத்தினால் பன்முகப்படுத்தப்பட்டது. இக்கைத்தொழில் 1986 ஆம் ஆண்டிலிருந்து தேயிலையை இரண்டாமிடத்திற்கு தள்ளிவிட்டு முக்கிய மொத்த வெளிநாட்டுச் செலாவணி உழைப்பாளனாக விளங்கி வருகின்றது.

கடந்த அண்மைக் காலத்தில் முன்னேற்றமடைந்த போட்டித் தன்மைகளின் காரணமாக இக்கைத்தொழில் ஒரு முதிர்ச்சித் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. தற்பொழுது கைத்தொழில் எதிர்நோக்கும் அறைகூவல் யாதெனில், 2005 ஆம் ஆண்டளவில் அதாவது ஏறத்தாழ பத்து ஆண்டுகளில் புடவை மற்றும் ஆடைகளில் முழுமையான சுதந்திர வர்த்தகத்தை உருவாக்குவதனை நோக்கி நெறிப்படுத்தப்பட்டுள்ள புடவைகள் மற்றும் ஆடைகள் மீதான உருகுவே சுற்றுவட்ட உடன்படிக்கையுடன் சாத்தியமான அளவிற்கு இணைந்து செல்லும் விதத்திலும், அதிகரித்துச் செல்லும் பன்னாட்டுப் போட்டிகளுக்கு தாக்குப் பிடிக்கக் கூடியதாகவும் கைத்தொழில்கள் அவற்றின் திறமையை முன்னேற்றிக்கொள்வதற்கான அவசர தேவையேயாகும்.

இலங்கையின் ஆடை உற்பத்திகளின் தரமும் விலைப் போட்டித் தன்மையும் நவீனத்துவ சந்தைகளில் அவை நுழையக்கூடியதாக இருந்த அவற்றின் திறமையில் பிரதிபலிக்கப்படுகின்றன. இலங்கையின் ஆடைகளில் ஏறத்தாழ 92 சதவீதமானவை ஐ. அ. நாடுகளுக்கும் ஐ. பொ. சமூகத்திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஐ. அ. நாடுகள் 1994 இல் இலங்கையின் ஏற்றுமதிகளில் 61 சதவீதப் பங்கை இறக்குமதி செய்து அதன் மிகப் பெரும் இறக்குமதியாளராக விளங்குகிறது. ஐ.

**அட்டவணை 1.26**

**ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் அனுமதிப்பங்கு பயன்பாடு 1994 சனவரி – திசெம்பர்**

| வகை எண் | உற்பத்தியின் விபரம் | அலகு | கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கு | பயன்பாடு | பயன்பாட்டு வீதங்கள் % |
|---|---|---|---|---|---|
| 6 | ஆடவர் அல்லது சிறுவரின் முழங்கால் வரையான காற்சட்டை குறுங்காற் சட்டைகள், நீளக் காற் சட்டை, பெண்கள் அல்லது பெண்பிள்ளைகளுக்கான நெய்யப்பட்ட நீளக் காற்சட்டை, தளர் ஆடைகள் | எண்ணிக்கை | 6,252,240 | 5,552,174 | 89 |
| 7 | பெண்கள் அல்லது பெண் பிள்ளைகளுக்கான மேலாடைகள், ஆண் பெண் மேலாடைகள் | எண்ணிக்கை | 10,824,160 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 8 | நெய்யப்பட்டவை அல்லது பின்னப்பட்டவை தவிர்ந்த ஆடவர் அல்லது ஆண்பிள்ளைகளின் மேலங்கிகள் | எண்ணிக்கை | 7,487,072 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 21 | தலைக்கவிகையுடனான நீண்ட, குளிர் ஆடைகள், தலைக்கவிகையுடனான துருவ ஆடைகள், காற்றாடைகள் இடுப்பளவான வெதுவெதுப்பான மேலாடைகள் | எண்ணிக்கை | 6,789,610 | 2,915,750 | 43 |

மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

பொ. சமூகம் 32 சதவீதமான இரண்டாவது பெரும் பங்கினைக் கொண்டுள்ளது. ஆடை ஏற்றுமதியாளர்கள் இறங்கியுள்ள ஏனைய சந்தைகள் கனடா, யப்பான், தென்கொரியா என்பனவற்றையும் உள்ளடக்குகின்றது.

ஐ.அ. நாடுகள் ஐ.பொ. சமூகம், கனடா ஆகிய நாடுகளுக்கு கிடைக்கத்தக்க அனுமதிப்பங்கு மற்றும் பயன்பாட்டு வீதம் என்பன முறையே அட்டவணைகள் 1.25, 1.26, 1.27 என்பனவற்றில் தரப்பட்டுள்ளன.

இருநூறு ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், 165

**அட்டவணை 1.27**

**கனடாவின் அனுமதிப் பங்கு பயன்பாடு**
**1994 சனவரி - திசெம்பர்**

| வகை எண் | உற்பத்தியின் விபரம் | அலகு | கிடைக்கத்தக்க அனுமதிப் பங்கு | பயன்பாடு | பயன்பாட்டு வீதங்கள் % |
|---|---|---|---|---|---|
| 1.0 | தடித்த மேலங்கிகள், வெதுவெதுப்பான மேலங்கி, மழைக்கான ஆடை | எண்ணிக்கை | 888,061 | 723,075 | 81 |
| 1.1 | தடித்த மேலங்கிகள் | எண்ணிக்கை | 111,618 | 62,063 | 56 |
| 2.0 | குளிர்கால உடுப்புக்கள் | எண்ணிக்கை | 210,986 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 3/4 | ஆண் பெண் சாதாரண, அதிசிறப்பு ஆடைகள் | எண்ணிக்கை | 768,395 | 412,636 | 54 |
| 3.1 | அதிசிறந்த முழு ஆடைகள் | எண்ணிக்கை | 23,532 | 3,654* | 16 |
| 5.0 | நீண்ட காற்சட்டைகள், முழு மற்றும் கட்டைக் காற்சட்டைகள் | எண்ணிக்கை | 794,081 | 700,578 | 88 |
| 6.0 | தைக்கப்பட்ட கொலர் மேலங்கிகள் | எண்ணிக்கை | 708,598 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 7/8 | நெய்யப்பட்ட மேலங்கிகள், பெண் மேலங்கிகள், இதையொத்த ஆடைகள், விளையாட்டு உடைகள், கே/சி மேலங்கிகள், பெண் மேலங்கிகள் இதையொத்த ஆடைகள், ரீ சேட்டுக்கள், சுவீட் மேலங்கிகள் | எண்ணிக்கை | 1,405,425 | 1,139,644 | 81 |
| 8.1 | ஆண் பெண் மேலங்கிகள், இதையொத்த ஆடைகள் | எண்ணிக்கை | 618,528 | 20,147 | 03 |
| 9.0 | உள்ளங்கிகள் | எண்ணிக்கை | 1,013,543 | முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது | |
| 10.0 | இரவாடைகள், குளியலறை அங்கிகள் | எண்ணிக்கை | 588,300 | 344,841 | 59 |
| 11.0 | குளிர் ஆடைகள் | எண்ணிக்கை | 228,479 | 22,572 | 10 |
| 12.0 | நீச்சல் உடைகள் | எண்ணிக்கை | 503,366 | 73,921 | 15 |
| 14.0 | குழந்தைகளின் ஆடைகள் | எண்ணிக்கை | 294,150 | 199,975 | 68 |
| 41.0 | படுக்கை விரிப்பு தலையணை உறைகள் | எண்ணிக்கை | 543,008 | 13,200* | 02 |
| 44.1 | வேலைக்கான கையுறைகள் | எண்ணிக்கை | 3,693,013 | 3,028,928 | 82 |

* 1994 நவெம்பரில் ஏற்றுமதி இடம்பெறவில்லை

மூலம் : கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டிலீடுபட்டிருந்ததுடன், 1994 திசெம்பர் இறுதியில் ஏறத்தாழ 71,088 பேருக்கு தொழில்வாய்ப்பினை வழங்கியுள்ள வேளையில் 9 தொழில் முயற்சிகள் நடைமுறைப்படுத்தலின் வெவ்வேறு கட்டங்களில்

இருந்தன. இந் நிகழ்ச்சித் திட்டத்திற்கு தனியார்துறையினால் வழங்கப்பட்ட மூலதனச் செலவு ரூ. 53,800 இலட்சங்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழில் முயற்சிகளின் ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 324,240 இலட்சமாக அல்லது 1994 இல் முதலீட்டுச் சபைக் கைத்தொழில்களின் மொத்த புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகளில் 54 சதவீதமாக இருந்தன.

## புதிய கைத்தொழில்களின் பிரதேச பரம்பல்

பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கிலும் கொழும்பு மாவட்டத்தில் கைத்தொழில்களின் மிதமிஞ்சிய செறிவின் காரணமாக ஏற்படும் பாதகமான விளைவுகளை ஆகக்குறைந்ததாக்கும் நோக்கிலும் கைத்தொழில் கொள்கை கிராமப்புறங்களில் கைத்தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதையே தொடர்ந்தும் நோக்கமாகக் கொண்டிருந்தது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சில் பதிவுசெய்யப்பட்டுள்ள கைத்தொழில்களின் பிரதேச பரம்பலானது 23 சதவீதம் அல்லது 346 தொழில் முயற்சிகள் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே அமைந்திருப்பதை வெளிப்படுத்தியது.

1994 இறுதியில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் தொழிற்படும் 442 கைத்தொழில்களில் 79 சதவீதமானவை அல்லது 348 தொழில் முயற்சிகள் கட்டுநாயக்கா மற்றும் பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலையங்களில் வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளின் முதன்மைக் காரணத்தினால் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைந்திருந்தன. முக்கியமாக கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் காரணமாக காலி மாவட்டத்தில் இருபத்தொரு தொழில் முயற்சிகள் வர்த்தகத் தொழிற்பாட்டில் காணப்பட்டன.

1994 இறுதியில் முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 இன் கீழ் (பொது ஊக்குவிப்புத் திட்டம்) வர்த்தகத் தொழிற்பாட்டிலிருந்த 349 தொழில் முயற்சிகளில் 280 அல்லது 80 சதவீதமானவை இந்த மாவட்டங்களில் கிடைக்கத்தக்கதாக இருந்த சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளின் காரணமாக கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் அமைந்திருந்தன. கடினமான பிரதேசங்களில் சிறப்பாக திருகோணமலை, மொனராகலை, மாத்தளை, வவுனியா, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள் நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கதொரு பண்பாகும். இருநூறு ஆடைத் தொழிற்சாலைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 21 மாவட்டங்களில் 165 ஆடைத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. இவற்றுள் 142 ஆடைத் தொழிற்சாலைகள் கொழும்பு, கம்பகா மாவட்டங்களுக்கு வெளியே அமைந்திருந்தன. அனுராதபுரம், குருநாகல், புத்தளம், கண்டி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்பட்ட ஆடைத் தொழிற்சாலையின் எண்ணிக்கை முறையே 15; 11; 13; 12; 15 ஆகும்.

## அட்டவணை 1.28

### பிரதேசவாரியான புதிய கைத்தொழில் பரம்பல்

(எண்ணிக்கை)

| மாவட்டம் | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில்கள் (அ) | முதலீட்டுச் சபையின் கீழான கைத்தொழில்கள் (ஆ) | | 200 ஆடை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான கைத்தொழில்கள் (ஆ) | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | பிரிவு 17 | பிரிவு 17இற்கு வெளியே | | |
| 1. கொழும்பு | 1,165 | 130 | 203 | 16 | 1,514 |
| 2. கம்பகா | 163 | 218 | 77 | 7 | 465 |
| 3. களுத்துறை | 41 | 15 | 15 | 10 | 81 |
| 2. காலி | 23 | 21 | 14 | 6 | 64 |
| 5. கண்டி | 29 | 11 | 8 | 12 | 60 |
| 6. புத்தளம் | 15 | 14 | 10 | 13 | 52 |
| 7. குருநாகல் | 9 | 11 | 8 | 11 | 39 |
| 8. அம்பாந்தோட்டை | 19 | 1 | 1 | 7 | 28 |
| 9. மாத்தறை | 20 | 1 | 1 | 4 | 26 |
| 10. பதுளை | 8 | 4 | 3 | 9 | 24 |
| 11. இரத்தினபுரி | 1 | 4 | 3 | 15 | 23 |
| 12. அநுராதபுரம் | 4 | 1 | 1 | 15 | 21 |
| 13. நுவரெலியா | 3 | 5 | 3 | 9 | 20 |
| 14. கேகாலை | 2 | 3 | - | 8 | 13 |
| 15. மாத்தளை | 4 | 1 | - | 5 | 10 |
| 16. அம்பாறை | 4 | - | - | 5 | 9 |
| 17. மொனராகலை | 1 | - | 1 | 5 | 7 |
| 18. பொலன்னறுவை | - | 2 | - | 4 | 6 |
| 19. வவுனியா | - | 1 | - | 2 | 3 |
| 20. திருகோணமலை | - | - | 1 | 1 | 2 |
| 21. மட்டக்களப்பு | - | - | - | 1 | 1 |
| மொத்தம் | 1,511 | 443 | 349 | 165 | 2,468 |

(அ) 31.12.93 இல் உள்ளபடி
(ஆ) 31.12.94 இல் உள்ளபடி

மூலங்கள் : கைத்தொழில், அபிவிருத்தி அமைச்சும் இலங்கை முதலீட்டுச் சபையும்